# சித்தர்கள் காட்டும் வாழ்வியல் முறைகள்

**முனைவர் மு. நாகராஜன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

சித்தர்கள் என்றால் கூடு விட்டுக் கூடு பாயும் வித்தைகளை அறிந்தவர்கள், மண்ணைப் பொன்னாக்கும் சித்துகளைச் செய்பவர்கள், வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம் என்பன போன்ற உயர்ந்த கருத்துக்களை பாடிச் சென்றவர்கள். இரசவாதம் தெரிந்தவர்கள். தமிழகத்தில் வாழ்ந்து மறைந்தும், மறையாமல் உள்ள சித்தர் பெருமக்கள் வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகள் வழியாக மன்பதைக்கு வேண்டிய வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்துள்ளார்கள்.

அறிவு, சிந்தித்தல், நிறைவேற்றுதல், நித்தியை யோகத்துக்குள் ஒன்றுதல் என்னும் பொருள்களைக்கொண்ட சொல் சித்தி என்பது. முக்திவழி சித்திநெறி எனப்பட்டது. விசுவாமித்திர முனிவர் தவமும் யாகமும் செய்த இடம் சித்தாசிரமம் எனப்பட்டது. மன ஒடுக்கம் சித்தாலயம் எனப்பட்டது. சித்தர்கள் சித்தாதிகள் எனப்பட்டனர். சித்தி பெற்றவர் சித்தர் எனப்பட்டனர். அணிமா முதலிய சித்திகள் கைவரப் பெற்றவர்களே சித்தர்கள் எனப்பட்டனர். சித்தர்கள் அனைவரும் கையாண்ட மொழி தமிழேயாகும். அவர்களின் பாடல்கள் தமிழ் மொழியிலேயே காணப்படுகின்றன. மிகவும் சாதாரண பாமரனுக்கும் தெரிந்த இரு சித்தர்கள், பாம்பாட்டிச் சித்தரும் அகப்பேய்ச் சித்தருமாவார்கள். இவர்களின் இயற்பெயர் இன்னவென்று தெரியவில்லை. இவர்களுள் ஒருவர் தம் சிந்தனையைப் பாட்டாக்கி ஆடு பாம்பே எழுந்தாடு பாம்பே என முடித்ததால் பாம்பாட்டிச் சித்தர் என அழைக்கப்பெற்றார். இன்னொருவர் அகப்பேய் எனப் பாடியதால் அகப்பேய்ச் சித்தர் என அழைக்கப்பெற்றார். இருவரும் அனைத்து சித்திகளும் கைவரப்பெற்ற நிலையில் அவற்றால் ஏதும் பயனில்லை என்பதை உணர்ந்து தெளிவான ஞானமெய்தி முக்தி பெற்றதாகக் கூறுவர்.

சித்தர்களுள் திருமூலரைத் தலைமையவராகக் கூறுவர். இச்சித்தர் சிவன்பால் சித்தத்தைச் செலுத்தி மக்களின் நல்வாழ்வுக்குரிய செயல்களைச் செய்ததோடு மக்கள் அறிந்தும் புரிந்தும் செயல்பட பல பாடல்களை விட்டுச்சென்றுள்ளார். இவர்களைச் சமூகப் பற்றாளர்கள் என்றே கூற வேண்டும். இச்சித்தர்கள் மாமேதைகள். யோகங்களால் உயிர் வளர் கலையை வளர்த்தவர்கள். வாழ்க்கைக் கலையைப் பிறர்க்கு உணர்த்தியதோடு வாழ்ந்தும் காட்டிய தவசீலர்கள். ஆன்மீக ஞானிகள். பக்தியில் புத்தொளி பாய்ச்சிய புரட்சியாளர்கள். மக்கள் இயல்பறிந்து வாழ்வுக்கலையைக் கற்பித்த உளவியல் நிபுணர்கள். செம்பைப் பொன்னாக்கிய வேதியியல்

விஞ்ஞானிகள். உடல் பிணி போக்கிய மருத்துவர்கள். சமுதாயம் வாழ பணிபுரிந்த சமூகத் தொண்டர்கள். இவர்கள் கூறியுள்ள நெறிகளை மக்கள் உணர்ந்து பின்பற்றினால் மக்களினத்தில் வேற்றுமை மறைய அன்பும் ஒற்றுமையும் பெருகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**சிவபுராணமும் உண்மையும்**

எண்ணற்ற சித்தர் குறிப்பைக்கொண்டுள்ள சிவபுராணம் மிகச்சிறந்த படைப்பு. சிவபுராணத்தில் இறைவன் ஒன்றே என்றும், காணும் பொருள்களில் எல்லாம் அவன் நீக்கமற நிறைந்துள்ளான் என்றும், அவனை அடைதலையே வாழ்வின் கொள்கைகளாகக் கொள்ள வேண்டும் என்று மக்களுக்கு அந்நூல் அறிவுறுத்துவதை அறிய முடிகிறது.

“ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க” என்ற தொடர் மிகவும் புகழ் பெற்றதாகும். இவ்வடிக்கு சமயச் சான்றோர்கள் வழக்கம் போல் இறைவன் ஒன்றே எனவும் பல வடிவங்களில் அவன் காட்சி தருகின்றான் என்றும் பொருள் கூறுவர். சித்தர்கள் இவ்வடிக்குக் கூறும் ஞானப் பொருளிலும் அதிக வேறுபாடுகள் இல்லை. விளக்கும்முறையிலே பல்வேறு விரிவான விளக்கங்களை ஞானிகள் எடுத்துக் கூறியுள்ளார்கள். கீதையிலும், உபநிடதங்களிலும் குடத்தில் உள்ள தண்ணீர் பற்றியும், குடத்துத் தண்ணீரில் காண்கின்ற கதிரவனின் நிழல் பற்றியும் பற்பல வடிவங்களில் உவமைகள் கூறப்பட்டுள்ளன. திருமூலரும் இப்பாடலடிக்கு அற்புதமான விளக்கம் தருகின்றார்.

சூரியன் வானத்திலே ஒருவனாக, ஏகனாக, நம் கண்முன்னே தோன்றுகிறான். பல சிறிய குடங்களிலே தண்ணீர் ஏந்திச்சூரியன் எதிரில் வைக்கும்பொழுது, ஒவ்வொரு குடத்துத் தண்ணீரிலும் சூரியனைக் காண்கின்றோம். அப்போது சூரியன் ஒருவனாகவும் பலவாகவும் நின்றவனாகின்றான். இறைவனுடைய தன்மையும் இதுவே. தான் அநாதியான மூலப்பொருளாய் ஏகனாய் நிற்கிறான். அதே சமயம் உயிர்களிடத்தும் அவன் உறைகின்றான். இந்த உவமையை எடுத்துக் காட்டுகிற திருமூலர் குடத்திற்குள் சூரியன் அடங்கிவிடுவதில்லை என்ற பேருண்மையைத் திருமந்திரத்தில் அழுத்தம் கொடுத்துப் பாடியுள்ளார்.

**“கடங்கடந் தோறுங் கதிரவன் தோன்றில்**
**அடங்கி மூடில் அவற்றில் அடங்கான்**
**விடங்கொண்ட கண்டனும் மேவிய காயத்**
**தடங்கிட நின்றதும் அப்பரி சாமே”**

என்பது அத்திருமந்திரம். மண்குடத்திற்குள்ளே தோன்றுகின்ற சூரியன் பேருருவாகிய பெருஞ்சூரியனே அல்லன் என்பது ஒருபுறம் இருக்க, தண்ணீரில் நிழல் விடுகிற கதிரவன் குடத்துக்குள் நின்றபோதிலும் அதனுள் அடங்காது நிற்கிறான். அதோடுகூட குடத்துக்கு உள்ளும் புறமுமாக அவன் விளங்குகிறான். என் வீடு, என் மனைவி, என் மக்கள், என் செல்வம், நான் எவ்வளவு ஆள், எவ்வளவு படித்தவன், எவ்வளவு புத்திசாலி என்று மனிதன் நான் எனது என்று சொந்தம் கொண்டாடுகின்றான். எது அவன் சொந்தம்? எது அவன் உடமை? மனிதன்தான் ஒரு பொம்மலாட்ட பொம்மை என்று அறிந்தான் இல்லை. எல்லாம் தன்னால்தான் நடக்கிறது என்று நினைக்கின்றான். அப்படி நினைப்பவர்களையும் ஆட்டி வைப்பவன் இறைவன். அவனை எப்படி வாழ்த்துவது? நாம் வாழ்த்தி அவனுக்கு என்னவாகப் போகிறது. வாழ்த்துவது என்று முடிவு செய்து விட்டால் என்ன சொல்லி வாழ்த்துவது என்று மாணிக்கவாசகர் திகைக்கிறார்.

**“வானகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்**
**கோனாகி யான் எனது என்றவரை கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே”**

வானமாகி, பூமியாகி, காற்றாகி, வெளிச்சமாகி, உடலாகி, உயிராகி, உண்மையானவையாகி, உண்மை அற்றவனாகி, எல்லாவற்றிற்கும் அரசனாகி, நான் எனது என்று கூறுபவர்களைக் கூத்தாடுபவனாகி, உயிர்களை எல்லாம் ஆட்டுவிப்பவன் அவனே, அவனது பாதம் பணிந்து வணங்குவோம்.

**மன அடக்கம்**

எல்லா துன்பத்திற்கும் காரணம் ஐம்புலன் அடக்கம் இன்மையே. மனதினையும் உடலினையும் தூய்மையாக வைத்துக் கொள்வதன் மூலமே அனைத்துக் காரியங்களிலும் வெற்றி பெற முடியும். வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க என்ற வரிக்கு மரபை ஒட்டிப் பொருள் கூறுகிற சமயவாதிகள் வேகம் என்பதை மனத்தின் ஐம்புலன் வழியே இயங்குகிற செயல்களின் வேகம் என்று பொருள் கூறுவர். இந்த வேகத்தைக் கெடுத்து ஆள்வது என்பது உலக இச்சைகளிலே ஈடுபட்டு, உழல்கின்ற மனத்தை அவற்றினின்று காப்பாற்றுவதன் பொருட்டு அந்த மனவேகங்களைக் கெடுத்து இறைவன் அருள்புரிகிறான். அந்த அருளைச் செய்வது அவனுடைய கருணையே ஆகும். அந்தக் கருணையின் சின்னமே திருவடி வேகத்தைக் கெடுக்கின்ற இந்த அருட்செயலிலே அந்த திருவடி வெற்றி பெறுமாக என்பது மரபுவழிப் பொருளாகும்.

இதற்கு உரை கூறுகிற ஞானியர்கள் 'வேகம் என்பதை மனத்தின் கீழ்நோக்கிச் செல்லும் விரைவு' என்று பொருள் கொள்வர். காமமாதி, மும்மலமும் அபக்குவிகளிடம் வேத்தோடு தொழிற்படுவது கண்கூடு. இந்த வேகம் கெடுவதற்குரிய வழியே மனமானது சிற்றம்பலமாகிய சிதாகாயப் பெருவெளியில் ஒன்றி நின்று சிவ ஒளியிலே பூரிப்பதாகும். இப்படிப் பூரிக்கின்ற பக்குவனுக்கும்இ உள்ளமானது சிவத்தோடு பொருந்தி துரியமாகிய உயர்களத்தில் இயங்குவதால் மல வேகங்கள் கெட்டழிகின்றன. இந்த மல நீக்கத்திற்கு உறுதுணையாக அமைவது உள்ளமாகிய பெருங்கோயிலிலே ஆன்ம வழிபாட்டின் முறையிலே யோகியர்கள் செய்கின்ற திருவடிப் பூசனையாகிய ஒளி வழிபாடு என்பதை சித்தர் பெருமக்கள் மறக்கவில்லை, ஆகையால் இச்சைகளில் ஆட்பட்டு துன்பவெளியில் தவிக்கவில்லை. இதனை உணராத பதறுகளாகிய மனித இனமே துன்பத்தில் உழன்று அடுத்த தலைமுறையையும் துன்பத்தில் தள்ளிவிடுகிறது. தூய்மையான வழியிலே சிறிது காலம் வாழ்ந்தாலும் போதும் மனமே, வாழ்வு நிலையற்றது என்பதை உணர்ந்து கொண்டு செயல்படு. இறைவனின் திருவடியாகிய ஒளி, மும்மலமாகிய இருளைக் கெடுத்து, பேரின்பப் பெரு வாழ்வை நல்குகிறது. இதுவே வேகங் கெடுத்தாளும் திருவடியின் தொழில், இந்தத் தொழிலே அந்தத் திருவடி எத்துணைக்கு வெற்றி பெறுகிறதோ அத்துணைக்கு ஞானக்கல்வி பயிலும் மாணவன் கடைத்தேறுகிறான். எனவே அந்தத் திருவடி வெல்க என்றார்.

**ஒழுக்கமே சிறந்தது**

சித்தர் இலக்கியத்தில் காண்கின்ற அத்தனை அறிவியலும் பொதுமக்களிடம் தமிழ்ச் சமுதாயத்தில் பரவி வேரூன்றி, அதுவே நமது மொழியிலும், அன்றாடத் தமிழ் வழக்கிலும், நம்முடைய தமிழ் இலக்கணத்திலும் நிலைத்து நிற்கிறது. வாழ்வே மாயமானது, நிலையற்றது என்பதை நன்கு உணர்ந்தவர்கள் சித்தர்பெருமக்கள். ஆகையால் தான் நிலையற்ற வாழ்விலே நிலையானதைத் தேடிக்கொள்ளவும், நமக்கு பிறகு நல்லதை விட்டுச்செல்லவும் வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதன் விளைவாகவே நிலையானது ஒழுக்கம் என்ற உண்மையை வலியுறுத்தினர். ஒழுக்கத்துடன் வாழ்ந்தும் காட்டினர். அனைவரும் ஒழுக்கமுடன் வாழ்தலைச் சிறந்தது என்றும் கூறினர். இதனைத் தான் வள்ளுவப் பெருந்தகையும்

**“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்“ (பா.131)** என்று தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

இறைவனை வேறு எங்கும் பார்க்காதே உன் உள்ளத்திலே பார் என்பதை தமது பாடல்களில் வலியுறுத்தியுள்ளனர் அப்பெருமக்கள். சிவவாக்கியர் இறைவனை உள்ளத்தில் காண முடியும் என்பதைக் கீழ்வரும் பாடலில்

**“கோவில் பள்ளி ஏதடா? குறித்து நின்றது ஏதடா?**
**வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா?**
**ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்**
**காயமான பள்ளியில் காணலாம் இறையையே”**

உணர்ந்து பாடியுள்ளார்.

இறந்தவர் பிழைப்பதில்லை என்னும் கருத்தில் சிவவாக்கியர் அழுத்தமான நம்பிக்கை உடையவராக இருந்துள்ளார். கறந்த பால் மடி புகாது, கடைந்த வெண்ணெய் மோர் புகாது, அது போல் இறந்தவர்கள் பிழைப்பதில்லை என்று கூறுகிறார்.

**கறந்த பால் மடி புகா: கடைந்த வெண்ணெய் மோர்புகா**
**இறந்தவர் பிழைப்பதில்லை இல்லை இல்லை இல்லையே**

வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளைத் தத்துவமாகப் பதிவுசெய்து உலகிற்கே வழிகாட்டியாக வாழ்ந்தவர்கள் சித்தர் பெருமக்கள். கறந்த பால் மீண்டும் மாட்டின் மடிக்குச் செல்லுமா? என அவர்கள் கேட்கும் கேள்வி மிகப்பெரிய விந்தையை உண்டாக்குகிறது. வெண்ணெய் மீண்டும் மோர் ஆக முடியாது என்பதும், இறந்தவர் மீண்டும் பிழைத்தல் அரிது என்ற கருத்தும் உலக உண்மையின் இயல்பே. ஆனாலும் அன்பு காரணமாக இறந்தவர்களை நினைத்து நாம் தொடர்ந்து கண்ணீர் வடிப்பது எதற்கு? இறந்தவர் மீண்டும் பிறப்பதில்லை என்பதை உணர்ந்து கொள் மனமே! இல்லற வாழ்விலே ஈடுபடும் அனைவரும் ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் அன்பினாலே துன்பம் உண்டாகிறது என்பதை உணராமல் அன்பு செலுத்தி விடைபெற்றுச் செல்கிறோம். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? என்றானே வள்ளுவன் அவனும் ஒரு சித்தன்தான்.

**மனத்தூய்மை**

குளித்தால் அழுக்குப் போய்விடும் என்று எண்ணும் மனிதர்களே, அழுக்கு எங்கே இருக்கிறது, எங்கே இல்லை? உள்ளத்தின் அழுக்கைக் களைய முயலுங்கள் என்று அறிவு கொளுத்துகிறார் சிவவாக்கியர்.

**“பூசனைக்கு வைத்த கல்லில் பூசை நீரும் சாத்துநீர்**
**ஈசனுக்கு உகந்த கல் எந்தக்கல்லு சொல்லுமோ”**

புரட்சிக் கருத்துகளுக்கு சொந்தக்காரர் சிவவாக்கியர். உள்ளத்தூய்மையே இறைவன் உறைவிடம் என்பதை மறவாதீர்கள். உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுதலையே வாழ்க்கை.

பிறவித் துயர் நீங்க வேண்டுமென்றால் யாருக்கும் தீமைகள் விளைவிக்க கூடாது என்பதை பிறவி தீரவென்றால் - அகப்பேய் பேதகம் பண்ணாதே என்னும் பாடலில் பதிவு செய்துள்ளார் அகப்பேய் சித்தர். மற்றவர்களை மதிக்க வேண்டும். நம்மைப்போல் பிறரையும் நினைக்கும் பாங்கு நமக்கு வளர்ந்தாலே போதும் இந்த உலகம் சிறப்பாக இயங்கும். உடல் அளவிலும், உள்ள அளவிலும் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாது. மற்றவர் மனம் புண்படும்வகையில் பேசினால்கூட நமக்கு மறுபிறவி கிட்டிவிடும், வாழ்வு என்பது வசந்தமா என்பது சிந்திக்க வேண்டிய செய்தியே. ஏனெனில் நாம் செய்த வினை காரணமாகவே இந்தப் பிறவி கிட்டி உள்ளது. வாழ்க்கை என்பது ஆனந்தமும், துன்பமும் கூடிய கலவை என்பதைக் கற்றோர் அறிவர். கருத்தில்கொண்டு நிகழ்காலத்தைத் தொலைத்து விடாதே.

மலையளவு செல்வம் வைத்திருந்தாலும் காலன் வந்து உயிரைக் கவர்ந்துகொண்டு செல்லும்பொழுது அச்செல்வத்தைக்கொண்டு செல்ல முடியாது என்பதை

**“மலை போன்ற செம்பொன் குவை வைத்திருப்பவர்**
**மறலி வருகையில் வாரிச் செல்வாரோ?”**

என்ற பாடலில் பாம்பாட்டி சித்தர் பாடியுள்ளார். இக்கருத்தையே நரிவெரூஉத்தலையாரும்

**“கணிச்சக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்**
**பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ”**

தமது பாடலில் பதிவு செய்துள்ளார். எனவே செல்வம் இருக்கின்ற காலத்தில் நமக்குத் தேவைப்படும் என்றோ? வயதான காலத்தில் தருமம் செய்து கொள்ளலாம் என்றோ நினைக்கக் கூடாது? ஏனெனில் இந்த வாழ்க்கை நிலையற்றது, எமன் அழைக்கும் போது நான் வரமாட்டேன் என்று கூற முடியாது. சொல்லப் போனால் இந்த வாழ்வு நீரில் தோன்றும் குமிழி போன்றது.

**கானல் நீரே வாழ்வு**

கானல் நீரைத் தண்ணீர் எனக் கருதித் தடுமாறும் மான்போல் உலக இன்பங்களை மெய்யென்று எண்ணுவது அறியாமை என்பதைப் பாம்பாட்டில் சித்தர்

**கானலை மான்நீர் எனவேகண்டு செலல்போல்**
**காசினி வாழ்வினை மூடர்கண்டு களிப்பார்**

என்னும் பாடலில் கூறிச் செல்கிறார். பேருந்தில் செல்கின்ற நாம் சாலையில் உள்ள வெப்பத்தைக் காணும் போது அது தண்ணீர் என்று உணருவோம், பேருந்தின் கீழே இறங்கி சென்று பார்த்தால் தான் நமக்கு உண்மைநிலை புரியும், அது போலத்தான் வாழ்வும், சிற்றின்பம், பேரின்பம் என்று வாழ்வில் இரண்டு உள்ளதை கற்றோர் உணர்வர். சிற்றின்ப வேட்கையில் பேரின்பத்தைத் தொலைக்கும் மானிடரே, சிற்றின்பத்திலே நாட்டம் கொள்ளாதீர்கள். ஐந்து நிமிடம் கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஆசைபட்டு தவறுகளைச் செய்து, சமாதி ஆவதற்குத்தானா?

**அடக்கத்தின் சிறப்பு**

அடக்கமே அனைத்துப் பண்புகளுக்கும் அடிப்படை, அடக்கம் அமரருள் உய்க்கும் என்பது வள்ளுவம். இடைக்காடர் மன அடக்கம், சின அடக்கம், ஆசை அடக்கம் ஆகிய மூன்று அடக்கங்களை வலியுறுத்துகின்றார். மேலும் மனத்தை மாடு என்றும், சினத்தைப் பாம்பு என்றும், ஆசையைப் பசு என்றும் உருவகித்துக் கூறுகிறார் இடைக்காடர். இதனை

**“மனமென்னும் மாடு அடங்கில் (இடை.சி.13)”**
**“சினமென்னும் பாம்பு இறந்தால் (இடை.சி.14)”**
**“ஆசையென்னும் பசுமாளின் (இடை.சி.15)”** என்னும் அவரது பாடலடிகளால் உணரலாம்.

**மனமே அமைதி கொள்**

மனிதனாகப் பிறந்தவர்களில் சிலர் மட்டுமே பிறரது துயரத்தால் பாதிக்கப்படுகிறார்கள், அவ்வாறு பாதிக்கப்படுவோரிலும் பிறரது துன்பங்களுக்கு விமோசனம் காண வேண்டும் என்று எண்ணுவோரும் ஒரு சிலரே. அவ்வாறு எண்ணியவர்தான் அகப்பேய்ச்சித்தர். தம் மனதினை அடக்கி யோக சாதனை புரிந்தால் இதற்கான விடையைக் காணமுடியும் என்று அவர் எண்ணினார். ஆனால் மனிதனாகப் பிறந்தவர்களால் மனதை அடக்குவது எளிதான காரியமா? மனம் தான் மனிதனைப் பாடாய்ப்படுத்துகிறதே! அதனால் இச்சித்தர் ஏ! என் அகமான மனமே! ஆசையால் நீ ஆடுகிறாய்! ஆணவத்தால் நீ ஆடுகிறாய்! வேஷத்தால் நீ ஆடுகிறாய்! இப்படிப் பேயாட்டம் ஆடும் நீ அடங்கவே மாட்டாய்? என்று குமுறுகிறார்.

**“நஞ்சுண்ண வேண்டாமே – அகப்பேய்**
**நாயகன் தான் பெறவே**
**நெஞ்சம் அலையாதே – அகப்பேய்**
**நீ ஒன்றும் சொல்லாதே”**

தம் மனதைப் பேயாகப் பாவித்து அதற்கு ஞான மார்க்கத்தைக் கூறுவது போன்று பாடியுள்ளார். அதாவது அவர் மனமே நீ அலைய வேண்டாம்! இறைவனது திருவடியை அடைய எனக்கு நீ எந்த வழியையும் கூற வேண்டாம். ஆன்மாவாகிய நான் கூறுவதை கேட்டு அதன்படி நட என்று மனதிற்கு ஆணையிட்டு ஞானமார்க்கத்தில் என்னென்ன செய்ய வேண்டும், எதையெதைச் செய்யக்கூடாது என்பனவற்றை அகப்பேய்ச்சித்தர் தன் மனதுக்கு கூறுவதைப் போன்று தெளிவாக மனித இனத்திற்கு விளக்கியுள்ளார்.

எளிய நடையில் அனைவரும் புரிந்து கொள்ளும் படி மனித ஆன்மா அடைந்தேறும் வழியைக் கடுவெளிச்சித்தர் தம் பாடலில்

**"நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"**

அழகாகக் கூறியுள்ளார். அதாவது மனிதனே தாயின் கருப்பையில் பத்து மாதங்களாயத் தவமிருந்து பெற்ற உடலினைத் தவறான நெறியில் செலுத்தி அழித்திடவா நீ பெற்றாய்? இந்த உடல் உள்ளபோதே இதன் உண்மைப்பொருளை உணர்ந்து ஆன்மாவாகிய நீ நல்வழியில் சென்று கடைத்தேற வேண்டாமோ? அதற்காக நீ என்ன செய்யப் போகிறாய்? இனி என்ன செய்யப் போகிறாய்? என்று மறைமுகமாக மனிதனிடம் கேட்கிறார்.

இங்கும் அங்குமாக அலைந்து திரியும் இயல்பைக் கொண்டது மனித மனம். அந்த மனமாகிய மாட்டைத் தவக்கயிற்றால் கட்டி அடக்கிவிட்டால் போதும், வீடுபேறு என்கிற முக்திநிலை வாய்த்துவிடும் என்பதை இடைக்காடர்

**"மனமென்னும் மாடடங்கிற்றாண்டவக்கோனே**
**வாய்த்த தென்றெண்ணேடா தாண்டவக்கோனே"**

என்னும் பாடலில் பதிவு செய்துள்ளார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தும் எப்பொழுதும் தீயவைகளையே விரும்பித்தேடும், அவற்றின் சித்தப்படி நடக்காமல் நல்லவற்றையே நாட வேண்டும், அப்பொழுது தான் தீவினைப் பயன்கள் தேய்ந்தழியும் என்பதை

**"மேயும் பொறி கடமை மேலிடவொட்டாக்கு வினை**
**தேயுமென்றே நல்வழியிற் செல்லு நீ கன் மனமே"**

என்னும் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**கருத்துரை**

நிலையுற்ற வாழ்விலே நிலையானது எது? என்று தேடும் மனித வாழ்க்கை விசித்திரமானது, ஆராய்ச்சிக்கு உட்பட்டது, முடியும் என்று தெரிந்தும் தேவையற்ற ஆசையால் அல்லல்படும் மனித சமூகமே, வாழ்வில் நிலையானது என்று ஒன்றும் கிடையாது, இன்று நமக்கு வாய்த்திருப்பது உயிராக இருந்தாலும் நாளை இருக்குமா என்றால் அது கேள்விக்குறிதான்.

**துணை நின்ற நூல்கள்**

1 கோமதிநாயகம் இ., சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி, சாந்தா பதிப்பகம், சென்னை-2008.
2 பி.எஸ்.ஆச்சார்யா, அகத்தியர் முதல் வாரியர் வரை சித்தர்கள் அறுபது பேர்: வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை-2011.

3 ஏடிஎம். பன்னீர்செல்வம், திருவண்ணாமலைச் சித்தர் இடைக்காடர், சூர்யா பதிப்பகம், திருவண்ணாமலை - 2012.
4 இந்திரா சௌந்தர்ராஜன், சித்தர்கள் ராஜ்ஜியம், சிவா கிராபிக்ஸ், சென்னை-2012.
5 அ. மாணிக்கம் (உ.ஆ), திருமந்திரம் மூலமும் உரையும் மூன்றாம் தொகுதி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-2002.
6 வ.சிவசங்கரன் (உ.ஆ), திருவாசகம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 2007.
7 க.ப.அறவாணன், திருக்குறள் தெளிவுரை, 2007, தமிழ்க்கோட்டம், சென்னை.
8 கு.வெ.பாலசுப்பிரமணியம் (உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும் புத்தகம்-1, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பி(லிட்), சென்னை.